


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 065 | 4 Pages | 04.10.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 065 | 4 பக்கங்கள் | 04.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று**

**விளக்கம்:**
**ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது**

# நடுவானில் 174 உயிர்களைக் காத்த இந்திய விமானிக்கு துபாய் இளவரசர் நேரில் வாழ்த்து



துபாய், அக். 4

நடுவானில்சகவிமானியின்கத்திக்குத்து தாக்குதலுக்கு உள்ளான நிலையிலும், சாதுரியமாக செயல்பட்டு 174 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சாரை, துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் இன்று நேரில் சந்தித்து பாராட்டினார்.நடுவானில் நடந்த பயங்கரம்பிளைதுபாய் விமானம் கடந்த மாதம் 30ந்தேதி துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு பறந்து சென்று கொண்டிருந்தது. அப்போது, அதன் இணை விமானி ஓமன் நாட்டைச் சேர்ந்த ஹமாம் அல் ஹம்மாமி திடீரென கேப்டன் ஸ்மித் மச்சாரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றார்.விமானியின் சாதுரியம் அவசரத் தரையிறக்கம்படுகாயமடைந்து ரத்த வெள்ளத்தில் இருந்த நிலையிலும், ஸ்மித் மச்சார் சாதுரியமாக செயல்பட்டு காக்பீட் கதவைத் திறந்தார். இதன் மூலம் உள்ளே நுழைந்த பயணிகள் மற்றும் பிற விமானப் பணியாளர்கள் தாக்குதல் நடத்தியவரைக் கட்டுப்படுத்தினர். பின்னர் விமானம் சவுதி அரேபியாவின்தபுக்நகரில்பாதுகாப்பாகஅவசரத்தரையிறக்கம்செய்யப்பட்டு, 174 பயணிகளின் உயிர் காப்பாற்றப்பட்டது.துபாய் இளவரசர் நேரில் சந்திப்புசவுதியில் முதலுதவி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உயர் சிகிச்சைக்காக ஏர் ஆம்புலன்ஸ் மூலம் விமானி ஸ்மித் மச்சார் துபாய்க்கு அழைத்து வரப்பட்டார். அங்குள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.இந்நிலையில், இன்று (சனிக்கிழமை) ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்ற துபாய் இளவரசரும் ஐக்கிய அரபு அமீரகத்தின் துணைப் பிரதமருமான ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம், விமானி ஸ்மித் மச்சாரைச்சந்தித்து நலம் விசாரித்தார். அவரது அபாரத்துணிச்சலையும், நூற்றுக்கணக்கான உயிர்களைக் காத்த தியாக உணர்வையும் மனதாரப் பாராட்டிய இளவரசர், அமீரகம் எப்போதும் அவருக்கு துணையாக இருக்கும் என்று உறுதியளித்தார்.

# கென்யாவில் சோகம்: வேன் மீது லாரி மோதி கோர விபத்து: மத நிகழ்ச்சிக்கு சென்ற 13 பேர் பலி




நைரோபி, அக். 4

கென்யாவில் வேன் மீது லாரி மோதிய சம்பவத்தில் மத நிகழ்ச்சிக்கு சென்ற 13 பேர் உயிரிழந்தனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு கென்யா. இந்நாட்டின் நகூரு பகுதியில் உள்ள கிறிஸ்தவ மத வழிபாட்டு தலத்தில் இன்று சிறப்பு மத நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த மத நிகழ்ச்சியில் பங்கேற்க மொம்பாசா நகரில் இருந்து வேனில் கிறிஸ்தவ பக்தர்கள் நகூரு பகுதிக்கு புறப்பட்டனர். அந்த வேனில் 20க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.விபத்து 17 பேர் பலிஇந்நிலையில், நைரோபி மொம்பாசா தேசிய நெடுஞ்சாலையில் சென்றபோது சாலையில் வேகாமாக வந்த லாரி எதிரே வந்த வேன் மீது மோதியது. இந்த கோர விபத்தில் வேனில் பயணம் செய்த 17 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், சிலர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆஸ்திரேலியா: விமான பணிப்பெண்ணாக வலம் வந்த 12 வயது சிறுமி



கான்பெரா, அக். 4

தீராத நோயால் பாதிக்கப்பட்டு மீண்ட 12 வயது சிறுமி ஒருவரின் வாழ்நாள் கனவை, ஆஸ்திரேலியாவின் முன்னணி விமான நிறுவனமான காண்டாஸ் நனவாக்கியுள்ளது. அந்த சிறுமி ஒரு நாள் விமானப் பணிப்பெண்ணாக மாறி, நிஜமான பயணிகள் விமானத்தில் பணியாற்றிய நெகிழ்ச்சியான சம்பவம் சமூகவலைதளங்களில்வைரலாகிவருகிறது.மருத்துவப் போராட்டமும் கனவும்ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தைச் சேர்ந்தவர் இந்திய வம்சாவளி சிறுமி த்ரிஷா செவ்வனே(வயது 12). இவருக்கு 4 வயது இருக்கும்போதே கடுமையான சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டது. தனது சிறுவயது முழுவதையும் ஆஸ்பத்திரியிலேயே கழித்த த்ரிஷாவுக்கு, கடந்த 2024ம் ஆண்டு அவரது தாயார்மிஷெல்தனதுஒருசிறுநீரகத்தைதானமாகவழங்கினார்.வெற்றிகரமான இந்தமாற்றுஅறுவைசிகிச்சைக்குப்பிறகுத்ரிஷாகுணமடைந்தார்.மருத்துவப் போராட்டங்களுக்கு இடையே, விமானங்களில் பயணிக்கும்போது பணிப்பெண்கள் செய்யும் சேவைகளால் ஈர்க்கப்பட்ட த்ரிஷாவுக்கு, தானும் ஒருநாள்விமானபணிப்பெண்ஆகவேண்டும்என்றஆசைபிறந்தது.நனவான ஆசைகுழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றும் 'மேக்ஏவிஷ்' அமைப்பு மற்றும் காண்டாஸ் விமான நிறுவனம் இணைந்து த்ரிஷாவின் இந்தக் கனவை நிஜமாக்கின. இதற்காக காண்டாஸ் நிறுவனத்தின் சிட்னி பயிற்சி மையத்தில் த்ரிஷாவுக்குமுறையானஅவசரக்காலபாதுகாப்புமற்றும்சேவைப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், அவருக்காக பிரத்தியேகமாக தைக்கப்பட்ட அதிகாரப்பூர்வ பணிப்பெண் சீருடையும், சிறப்பு முத்திரையும் வழங்கப்பட்டது.பயணிகளுக்கு சேவைபயிற்சிக்குப் பிறகு, கடந்த மாதம் 15 ந்தேதி சிட்னியிலிருந்து அடிலெய்டு சென்ற வணிக ரீதியான பயணிகள் விமானத்தில் (கியூஎப்735) த்ரிஷா பணிப்பெண்ணாக களமிறங்கினார். விமானத்தில் ஒலிபெருக்கி மூலம் பாதுகாப்பு அறிவிப்புகளை வழங்கியது, பயணிகளை இன்முகத்துடன் வரவேற்றது, மற்றும் தள்ளுவண்டி மூலம் பயணிகளுக்கு சிற்றுண்டிகளைப் பரிமாறியது என நிஜமான பணிப்பெண்ணைப்போலவேஅனைத்துகடமைகளையும்த்ரிஷாசெவ்வனே செய்தார்.முன்னணி விமானப் பணிப்பெண் ஆஷ்லி பிஷர் த்ரிஷாவுக்கு வழிகாட்டியாகசெயல்பட்டார்.த்ரிஷாவின்இந்தநெகிழ்ச்சியானவீடியோவை காண்டாஸ் நிறுவனம் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ள நிலையில், த்ரிஷாவின் தன்னம்பிக்கையையும், விமான நிறுவனத்தின் இந்த நற்செயலையும் உலகெங்கிலும் உள்ள நெட்டிசன்கள் பாராட்டி வருகின்றனர்.

# தாராபுரம் வேட்பாளர் சத்தியபாமா குறித்து மு.க.ஸ்டாலின் கருத்து: முதல்வர் கடும் கண்டனம்



சென்னை, அக். 4

பெண்களை ஆபாசமாக பேசி வரும் தீய சக்தி தி.மு.க.விற்கு தமிழக பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக தனது கண்டனத்தை தெரிவிப்பதாக முதல்அமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் என்ற பெயரில், தீய சக்தியான தி.மு.க. சார்பில் ஓர் அவதூறு மற்றும் அநாகரிக கூட்டத்தை நடத்தியுள்ளார், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நமது தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா அவர்கள்குறித்து, உருவகேலி செய்து, மிகவும் அநாகரிகமாக பேசி புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

தி.மு.க. சார்பாக வளர்க்கப்பட்டு வரும் ஆபாச நதியை, வன்ம நதியை, வக்கிர நதியை உருவாக்கியதே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய தான்தான் என்பதைப் பெருமையுடன்மார்தட்டிமகிழ்வுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள் தி.மு.க.வினர். ஆபாசமும் வன்மமும் வக்கிரமும் தி.மு.க.வின் மூலக்கூறிலும் மூளைக்கூறிலும் கலந்திருப்பதை தமிழக மக்கள் அனைவரும் காலகாலமாக உணர்ந்தே வைத்திருக்கின்றனர்.

பெண்களைப் பற்றி ஆபாசமாக பேசுவதில், அதிலும் பெண்களை அருகில் வைத்துக்கொண்டே, அவர்கள் அருவருப்பாக உணர்வதைக் கூட கண்டுகொள்ளாமல் பேசுவதில் வல்லவர்களான இந்த தீய சக்தி கூட்டத்திற்கு தமிழக மக்களும் தாராபுரம் தொகுதி மக்களும் தக்க பதிலடியை கொடுக்கத்தான் போகின்றனர்.

தொடர்ந்து பெண்களை ஆபாசமாக பேசி வரும் தீய சக்தி தி.மு.க.விற்கு தமிழக பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெற்றிப்பயணத்திட்டத்தை மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுப்படுத்தியதற்கு நன்றி: திருமாவளவன்



சென்னை, அக். 4

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை மாற்றுத் திறனாளிகளுக்கு விரிவுபடுத்தியுள்ளதாக சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி அறிவித்துள்ளதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வரவேற்று நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு அரசு வெற்றி பயணத்திட்டத்தின் மூலம் கட்டணமில்லா பேருந்து சேவை தற்போது பெண்கள் மற்றும் திருநர்களுக்கு விரைவு (Express), குறைந்த நிறுத்தங்கள் கொண்ட சேவை (LSS), சொகுசு (Deluxe) பேருந்துகளுக்கு நீட்டிக்கப்பட்டு இதனை முதல்அமைச்சர் ஜோசப் விஜய் துவக்கி வைத்துள்ளது பாராட்டுக்குரியது.

பெண்கள், திருநர் போன்றே அரசின் சிறப்பு கவனம் தேவைப்படுகிற சமூகமான மாற்று திறனாளிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கடந்த 09.09.2026 அன்று முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யிடம் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் கோரிக்கைக் வைக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவுபடுத்தியுள்ளதாக சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி அறிவித்துள்ளதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வரவேற்று நன்றியினைதெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அறிவிப்புனை உறுதிப்படுத்தி நடைமுறைப்படுத்தும் வகையில் இதற்கான அரசாணையினை தமிழ்நாடு அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நில ஆவணம் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே மானிய உரமா? தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

சென்னை, அக். 4

நில ஆவணம் உள்ளோர்களுக்கு மட்டுமே இனி மானியத்தில் ரசாயண உரங்கள் என்று மத்திய அரசு நடைமுறைக்கு என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

விவசாயிகள்வேளாண்சாகுபடிக்கு தேவையான ரசாயண உரங்களை வாங்குவதற்கு இனிமேல் கே.சி.சி.. அட்டையை பெற்று, அவரவர்களின் ஆதார் கார்டுடன் இணைத்து கொடுத்தால் தான், தேவையான ரசாயன உரங்களை பெற முடியும் என்கிற நிபந்தனையை அறிவித்த மத்திய அரசு, சிவகங்கை, ஈரோடு இரு மாவட்டங்களிலும் நேற்று முதல் அமல்படுத்த தொடங்கிவிட்டது. இதை அறிவித்த நேரத்திலேயே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எதிர்த்தது.

உர வினியோகத்தில் தவறுகளை களைந்து ஒழுங்குப்படுத்திகண்காணித்திடமத்தியவேளாண் அமைச்சகம், விவசாயிகள், தி தி ஷி எனும் செயலி மூலம் நில பரப்பளவை பதிவு செய்து, கியூ.ஆர் கோடு மூலம் டோக்கன் பெற்று விவசாயிகள் உரங்களை பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

இந்தஅடையாளஅட்டைபெறவேண்டுமெனில், சாகுபடி நிலம் பத்திரப்பதிவுடன் உள்ள விவசாயிகளாக இருக்க வேண்டும், நிலம் கிரயம் செய்திருந்தாலும் பத்திரபதிவு செய்து கொள்ளாதவர்கள். ஒப்பந்த சாகுபடியாளர்கள், கோவில், மடம் உள்ளிட்ட நிலங்களின் சாகுபடியாளர்கள் எவருக்கும் அடங்கல் கிடைக்க வாய்ப்பு இல்லாத நிலையில் கே.சி.சி அடையாள அட்டை கிடைக்காது. கூட்டு பட்டா உள்ளவர்களுக்கு அடங்கல் பிரித்து கிடைக்காது, ஆண்ட்ராய்டு செல்போன் பல விவசாயிகளிடம் இல்லாத நிலையில், அரசு கூறுவது போல் அவர்களே பதிவு செய்யலாம் என்பது வாய்ப்பில்லை. பொது சேவை மையங்களுக்கு சென்றால் இணைய வழி தொடர்பு கிடைப்பதில் சிக்கல்.. விவசாயிகளின் பணம் இருப்பை பொறுத்து உரம் பெற்றிட பல பில் போட்டு உரம் வாங்கிட முடியாது.



இதனால் சாகுபடிக்கான உரங்களை டோக்கன் இல்லாதவர்கள் இனி வாங்கமுடியாது. இதனால் வேளாண் மகசூல் பெரும் நிலையில் பாதிக்கப்படும். இதைப் பற்றி எல்லாம் சிந்திக்காது ஒன்றிய அரசு கண்மூடித்தனமாக இதை அமல்படுத்தலாமா..? தமிழ்நாட்டில் 60 சதம் விவசாயிகள் குத்தகையாளர்களாவர். இவர்களில் பெரும்பகுதியினர்சிறு குறு விவசாயிகள். இவர்கள் தன் உழைப்பை மட்டுமே நம்பி இயற்கை யோடு போராடி உணவு உற்பத்தியை பெருக்குவதோடு, தன் வாழ்வு நிலையை இதைக்கொண்டு தான் சமாளித்து வருகின்றனர்.

மத்திய அரசின் திட்டங்கள் அனைத்துமே குத்தகை விவசாயிகள் உள்ளிட்ட நில ஆவணம் இல்லாதோர் எந்த சலுகைளையும் பெற முடியாத நிலையில் தான் தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது. குறிப்பாக, பிரதமர் நலநிதி எனும் திட்டம் மூலம் வருடத்திற்கு ரூபாய் 6 ஆயிரம் வழங்குவது, கிசான் சமான் அட்டை எனும் விவசாயிகளுக்கான அடையாள சான்று, போன்ற மத்திய அரசின்திட்டங்களில் நில ஆவணமற்றோர் இணைக்கப்படவில்லை.

தற்போது, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பிரதான் மந்திரி கிஸான் மாந்தன் யோஜனா என்று விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ள ஓய்வூதிய திட்டம் என்ற நவீன சேமிப்பு திட்டத்திலும் இவர்களுக்கு வாய்ப்பு இல்லை. இப்படி எல்லா வகையிலும் நில ஆவணமற்றோர், குத்தகை சாகுபடி விவசாயிகள் புறம் தள்ளப்பட்டால் இவர்களின் வாழ்க்கைக்கான உத்திரவாதம் குறித்து மத்திய அரசு சிந்திக்க மறுக்கிறது.

இது அமலாக்கப்பட்டால் விவசாயிகளிடையே பெரிய கொந்தளிப்பு ஏற்படும். அதுவும் சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்காத நிலையில், பருவமழை பொய்த்த நிலையில்,, என்னசெய்யப்போகிறோம் என்கிற அச்சத்தில் இருக்கிற விவசாயிகளிடம் இதை அமல்படுத்துவது பெரிய வேதனையாகும். வேளாண் பயன்பாடு உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருவதால் தான், விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைத்து வருகிறது. மானியத்தில் விவசாயிகளுக்காக கொடுத்து வரும் இந்த உர மூட்டைகளை கள்ளத்தனமாக வேறு பயன்பாட்டிற்கு கடத்தப்படும் நிலையில் தான் விவசாயிகள் மட்டுமே இந்த உரங்களை பெற வேண்டும் என்று இந்தபுதியகட்டுப்பாட்டை அரசு அமலாக்குவதாக கூறுகிறது.

உண்மையே, இந்த மோசடியை தடுத்திட உரிய நடவடிக்கை எடுக்க அதிகார வாய்ப்பு இருக்கிற அரசு, விவசாயிகளை வஞ்சிக்க கூடாது. இதனால் நில ஆவண உரிமையற்றோர் மானிய உரங்களை பெற முடியாது என்ற நிலையை மத்திய அரசு சிந்திக்காதது கண்டனத்துக்குரியது.

இந்த நிலையில் அனைத்து விவசாயிகளுக்கும் தட்டுப்பாடு இன்றி வழக்கம் போல் மானிய விலையில் ரசாயண உரங்கள் கிடைத்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது. தமிழக அரசு அவசரமாக இது குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி, முந்தய நிலையிலேயே விவசாயிகள் ரசாயண உரங்களைப் பெற்றிட நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூட்டிய வீட்டில் துணிகரக் கொள்ளை: 45 சவரன் நகைகள், ரூ.5 லட்சம் பணம் திருட்டு

விழுப்புரம், அக். 4

விழுப்புரம்மாவட்டம்திருவெண்ணெய்நல்லூர் கிருபாபுரீஸ்வரர் தெருவைச் சேர்ந்தவர் முருகன். திருமண மண்டப உரிமையாளரான இவர், கடந்த சிலதினங்களுக்குமுன்புதனது குடும்பத்தினருடன் வெளியூர் சென்றிருந்தார். இதனால் இவரது வீடு பூட்டப்பட்டிருந்தது. முருகன் வீடு பூட்டியிருப்பதை நோட்டமிட்ட மர்ம நபர்கள், நள்ளிரவில் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்துள்ளனர். பின்னர் அங்கிருந்த பீரோவைத் திறந்து, அதில் வைக்கப்பட்டிருந்த 45 சவரன் தங்க நகைகள் மற்றும் ரூ.5 லட்சம் ரொக்கப் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். வெளியூர் சென்றிருந்த முருகன் மற்றும் அவரது குடும்பத்தினர் இன்று (சனிக்கிழமை) வீட்டிற்குத் திரும்பியுள்ளனர். அப்போது வீட்டின் முன் கதவு பூட்டு உடைக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். உள்ளே சென்று பார்த்தபோது நகைகளும், பணமும் திருட்டுப்போயிருப்பது தெரியவந்தது. இது குறித்து உடனடியாக திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கினர். கைரேகை நிபுணர்கள் வரவழைக் கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்ப ட்டன. மேலும், மோப்ப நாய் உதவியு டனும் சோதனை நடத்தப்பட்டது.



கொள்ளைச் சம்பவம் நடந்த துல்லியமான தேதி மற்றும் குற்றவாளிகளைக் கண்டறிய, அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை போலீசார் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர். மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் நடந்துள்ள இந்த துணிகரக் கொள்ளை சம்பவம் அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தினகனி



# தாராபுரம் பிரசாரத்தில் மு.க.ஸ்டாலின் மற்றவர்களின் உடல்நிலை பற்றி பேசியது கண்டிக்கத்தக்கது: சவுமியா அன்புமணி




தூத்துக்குடி, அக்.4

தாராபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்தில் முன்னாள் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, மற்றவர்களின் உடல்நிலையைப் பற்றிப் பேசியது கண்டிக்கத்தக்கது. யாரையும் உடல் ரீதியாகக் கேலி செய்யக்கூடாது என சவுமியா அன்புமணி எம்.எல்.ஏ. தெரிவித்தார். தூத்துக்குடியில் சவுமியா அன்புமணி எம்.எல்.ஏ. பேட்டிபா.ம.க. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அன்புமணியின் மனைவியும், எம்.எல்.ஏ.வுமானசவுமியாஅன்புமணிபல்வேறுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் தூத்துக்குடி வந்தடைந்தார்.தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த சவுமியா அன்புமணி எம்.எல்.ஏ. கூறியதாவது:தாமிரபரணி ஆற்றில் கழிவுகள் கலப்பது குறித்து ஆய்வுஇன்று தூத்துக்குடி, நாளை திருநெல்வேலி, நாளை மறுநாள் நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்துள்ளேன். நாளை தாமிரபரணி ஆற்றில் கழிவுகள் கலப்பதாகத் தொடர்ந்து புகார்கள் வந்துள்ள நிலையில், அதனை நேரில் ஆய்வு செய்ய உள்ளேன். முன்னதாக அன்புமணி 'தாமிரபரணி காப்போம்' நடைப்பயணம் மூலம் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியிருந்தார். சட்டப்பேரவையிலும் தாமிரபரணி கழிவுநீர் பிரச்சினை குறித்து நான் பேசியுள்ளேன். தமிழகம் முழுவதும் ஆறுகளில் கழிவுகள் கலக்கப்படும் நிலையில், தாமிரபரணியும் அதற்கு விதிவிலக்கல்ல. கழிவுகள் எவ்வாறு கலக்கின்றன, அதை எப்படிச் சரிசெய்யலாம் என்று நாளை நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள உள்ளேன்.மதுக்கடை திறக்க எதிர்ப்பு; 7வது நாளாக தொடரும் போராட்டம்தூத்துக்குடி மீளவிட்டான் பகுதியில் புதிதாக மதுக்கடை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொதுமக்கள் தொடர்ந்து 7வது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்த பகுதியைச் சுற்றி பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் இருப்பதால் மதுக்கடை திறக்கப்பட்டால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி என்றும் உறுதுணையாக இருக்கும்.மதுவால் 54 லட்சம் பேர் பாதிப்புநேற்று சென்னையில் 'மதுவில்லா தமிழகம்' விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மதுவால் 54 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு தலைமுறையினர்மதுவுக்குஅடிமையாகிவிட்டநிலையில், மூன்றாவது தலைமுறையையாவது மது இல்லாத தமிழகத்தில் ஒழுக்கமாக வளர்க்க வேண்டும். மு.க.ஸ்டாலின் மற்றவர்களின் உடல்நிலை பற்றி பேசியதற்கு கண்டனம்தாராபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்தில் முன்னாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, மற்றவர்களின் உடல்நிலையைப் பற்றிப் பேசியது கண்டிக்கத்தக்கது. யாரையும் உடல் ரீதியாகக் கேலி செய்யக்கூடாது. தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமைந்து 100நாட்கள்மட்டுமே ஆகிறது. மதுக்கடைகளை மூடியது மற்றும் பெண்கள்பாதுகாப்புக்கான 'சிங்கப்பெண் படை' திட்டம் போன்றவற்றை வரவேற்கிறேன்.உள்ளூர் இளைஞர்களுக்கு 75 சதவீதம் வேலைவாய்ப்பு10,000 காவல் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பும் வரவேற்புக்குரியது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்கக் காலியாக உள்ள காவலர் பணியிடங்களை விரைவாக நிரப்ப வேண்டும். அதேபோல், உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்ய, தொழிற்சாலைகளில் 75 சதவீதம் வேலைவாய்ப்பை உள்ளூர் இளைஞர்களுக்கே வழங்கும் தேர்தல் வாக்குறுதியைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அவர் கூறினார்.

# 'மு.க.ஸ்டாலினின் பேச்சு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது' தமிழிசை சவுந்தரராஜன் ஆவேசம்

சென்னை, அக். 4



தாராபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்தில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா குறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேசிய பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், மு.க.ஸ்டாலினின் பேச்சு தனக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியதாக பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: உருவ கேலி"மிகுந்த கோபத்துடன் எனது கண்டனத்தை நான் பதிவு செய்கிறேன். வருத்தம் என்று கூட சொல்லக் கூடாது என்று நான் நினைத்தேன். எனது வருத்தத்தை நான் பதிவு செய்யவில்லை, கண்டனத்தை பதிவு செய்கிறேன். முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வாயில் இருந்து வந்த வார்த்தைகள் எனக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. நான் பா.ஜ.க. மாநில தலைவராக இருந்தபோது என்னை கடுமையாக உருவ கேலி செய்தார்கள். தி.மு.க. தொண்டர்கள்தான் அவ்வாறு பேசுகிறார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் இன்று தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலினும், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுவதையும் பார்த்தால், இவர்கள்தான் அவர்களது தொண்டர்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்களோ எனஎண்ணத்தோன்றுகிறது. உள்ளத்தில் இப்படிப்பட்ட எண்ணம் இல்லாவிட்டால் அது வார்த்தையில் வராது. ஆண் தலைவர்கள்இந்த தலைவர்களெல்லாம் சமூகத்திற்கும் இல்லாமல், பெண்கள் முன்னேற்றத்திற்கும் இல்லாமல், சுய ஓட்டுக்காகத்தான் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் ஆண் தலைவர்கள் பேசும்போது எச்சரிக்கையாக பேச வேண்டும் என்று எச்சரிக்கையாகவே நான் சொல்கிறேன். ஏதோ போகிற போக்கில் என்ன வேண்டுமானாலும் இயல்பாக பேசிவிட்டு போய்விடலாம் என்று நினைக்கக் கூடாது. அரசியலில் பெண்கள் பெண்கள் அரசியலுக்கு வருவதே சிரமம். எல்லோரும் இரும்பு மனம் படைத்த பெண்களாக இருந்துவிட முடியாது. எனவே அரசியலுக்கு பெண்கள் வருவதை ஆரோக்கியமானதாக பார்க்க வேண்டும். அரசியலில் ஆண்கள் இருக்கும் அதே நிலையில்தான் பெண்களும் இருக்கிறார்கள். ஆண் தலைவர்களை யாரையாவது பெண் தலைவர்கள் உருவ கேலி செய்கிறோமா? அப்படியே நாங்கள் பேசினாலும் கூட மரியாதையாகத்தான் பேசுவோம். தொடர்ந்து பெண்களைப் பற்றி ஏன் இப்படி பேசி வருகிறீர்கள்? பெண்கள் யாரும் அரசியலுக்கு வரக்கூடாது என்று நினைக்கிறீர்களா? பெண்கள் யாரும் போட்டி போடக்கூடாது என்று நினைக்கிறீர்களா? உங்கள் கட்சியில் இருக்கும் பெண் தலைவர்கள் பற்றிய உங்கள் எண்ணம் என்ன?"இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் மின்வெட்டுக்கும், அரிவாள் வெட்டுக்கும் இடையே தான் போட்டி உதயநிதி ஸ்டாலின்

திருப்பூர், அக். 4



இடைத்தேர்தலில் திமுகவின் வெற்றியை மக்கள் உறுதி செய்ய வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் பேசினார்.தாராபுரம் தொகுதி திமுக வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் இன்று பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது;கடந்த தேர்தலில் தாராபுரம் மக்கள் திமுகவுக்கு அல்வா கொடுத்துவிட்டனர். இடைத்தேர்தலில் திமுகவின் வெற்றியை மக்கள் உறுதி செய்ய வேண்டும். கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற துரோகிகளை மறக்க மாட்டோம்.அதிமுக எம்.எல்.ஏ.க்களைபெட்டிகளைகொடுத்துமுதல்அமைச்சர் விஜய் விலைக்கு வாங்கினார். தவெக வேட்பாளர் சத்தியபாமா சாதாரண பல்டி பாமா அல்ல அந்தர் பல்டி பாமா. சட்டப்பேரவையில் காதில் பஞ்சு வைத்துக்கொள்ளும் அளவுக்கு முதல்அமைச்சர் கத்துவார். மதுராந்தகம் தொகுதியில் கத்தி பேசிய விஜய் தாராபுரத்தில் நடிக்கிறார். சத்தியபாமா ஏன் அழுகிறார்? அவரை தேர்வு செய்த மக்கள் தான் அழ வேண்டும். சட்டப்பேரவையில் நாங்கள் படும் பாடு எங்களுக்கு தான் தெரியும். என்ன கேள்வி கேட்டாலும் பாட்டு மட்டுமே பாடுகிறார்கள். சட்டசபையில் முதல் அமைச்சர் முன் நடனம், சண்டைக்காட்சி மட்டும் தான் அரங்கேறவில்லை. சத்தியபாமா வெற்றிபெற்றால் மீண்டும் கட்சி மாறுவார். காதல் தோல்வி பற்றி பேரவையில் எம்.எல்.ஏ. பேசுகிறார், முதல்அமைச்சர் விஜய் சிரிக்கிறார். சட்டசபையில் நான் கேட்ட 18 கேள்விகளுக்கு முதல் அமைச்சர் விஜய் பதிலளிக்கவில்லை. சட்டப்பேரவையில் யாரும் ஓடக்கூடாது என சொல்லிவிட்டு முதல்அமைச்சர் விஜய் ஓடினார். அண்ணன் எடப்பாடி பழனிசாமி பேசியதைக் கேட்கக்கூட பேரவையில் முதல்அமைச்சர் இல்லை. தமிழ்நாட்டில் மின்வெட்டுக்கும், அரிவாள் வெட்டுக்கும் இடையே தான் போட்டி..இவ்வாறு அவர் கூறினார்.

# நீர் சேமிப்புக்கு அணைகள் மட்டுமே தீர்வல்ல: மண்ணின் வளத்தை மேம்படுத்த வேண்டும்: சத்குரு வலியுறுத்தல்

கோவை , அக். 4



நீர் சேமிப்புக்கு அணைகள் மட்டுமே தீர்வல்ல: உலகின் மிகப்பெரியஅணையானமண்ணின்வளத்தைமேம்படுத்த வேண்டும்! நாட்டின் நீர் இருப்பு சரிவை சுட்டிக்காட்டி சத்குரு வலியுறுத்தியுள்ளார்.மேம்படுத்த வேண்டும்இந்தியாவின் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ள நிலையில், "அதிக நீரை சேமிக்க மேலும் பல அணைகளை கட்டுவது மட்டுமே தீர்வல்ல. இந்த பூமியிலேயேமிகப்பெரியஅணையாகஇருக்கும்மண்ணின் வளத்தை மேம்படுத்த வேண்டும்.70 சதவீதமாக குறைந்துள்ளதுசமீபத்தில் வெளியாகியுள்ள செய்திகளின்படி, இந்தியாவில் உள்ள 178 முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு அதன் மொத்தக்கொள்ளளவில் 70 சதவீதமாக குறைந்துள்ளது. மத்திய நீர் ஆணையத்தின் தரவுகளின்படி, இது கடந்த பத்தாண்டுகளில் பதிவான மிக குறைந்த அளவாகும். கடந்த 10 ஆண்டுகளின் சராசரி நீர் இருப்பு 76.62 சதவீதமாகவும், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 79 சதவீதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.தென்னிந்திய நீர்த்தேக்கங்கள்குறிப்பாக, பருவமழை பற்றாக்குறை காரணமாக தென்னிந்தியா மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 87.25 சதவீதமாக இருந்த தென்னிந்திய நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு, தற்போது 50 சதவீதமாக சரிந்து அபாய கட்டத்தை எட்டியுள்ளது.இந்த நெருக்கடியான சூழ்நிலை குறித்து சத்குருதனது எக்ஸ்தளபக்கத்தில் வெளியிட்டுள்ளபதிவில் தெரிவித்திருப்பதாவது:மிகப்பெரிய அணை மண்தான்உண்மையான நீர்வளம் நமது காலடிக்கு கீழேயே இருக்கிறது. உலகில் உள்ள அனைத்து நதிகளையும் ஒன்றாக சேர்த்தால் கிடைக்கும் நீரின் அளவை விட 800 சதவீதம் அதிக நீரைத்தேக்கி வைக்கும் திறன் மண்ணுக்கு உண்டு.

ஆனால், இந்த திறனை முழுமையாக பயன்படுத்த வேண்டுமென்றால்,மண்ணின்கரிமவளத்தைஅதிகரிக்கும் மரங்கள், புதர்கள், கோடைகால பயிர்கள், நிலத்தை மூடியிருக்கும் தாவரங்கள் போதுமான அளவில் இருக்க வேண்டும். அதிக நீரை சேமிக்க மேலும் பல அணைகளை கட்டுவது மட்டுமே தீர்வல்ல. இந்த பூமியிலேயே மிகப்பெரிய அணை மண்தான்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன ஓட்டியிடம் ஜிபே மூலம் லஞ்சம் கேட்ட போலீஸ் ஏட்டு சஸ்பெண்ட்: கமிஷனர் உத்தரவு

நெல்லை, அக். 4

நெல்லையில் வாகன சோதனையின்போது வாகன ஓட்டியிடம் ஜிபே மூலம் லஞ்சம் கேட்ட போலீஸ் ஏட்டை மாநகர போலீஸ் கமிஷனர் தேஷ்முக் சேகர் சஞ்சய் அதிரடியாக சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார். போலீசார் வாகன சோதனைநெல்லை மேலப்பாளையம் காவல் நிலையத்தில் போலீஸ் ஏட்டாகப் பணிபுரிந்து வருபவர் சொர்ணராஜ். இவர் மேலக்கருங்குளம் சோதனைச்சாவடியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அப்பகுதியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக பைக்கில் வந்த ஒரு நபரை தடுத்து நிறுத்தி ஆவணங்களைசரிபார்த்தனர். இதில் அவரது வாகனத்திற்கு சரியான காப்பீடு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. ஜிபே மூலம் லஞ்சம் கேட்ட போலீஸ் ஏட்டுஇதுகுறித்து அங்கிருந்த உயர் அதிகாரி, அந்த நபருக்கு அறிவுரை வழங்கி உடனடியாக காப்பீடு செய்யுமாறு கூறி அனுப்பி வைத்துள்ளார். இருப்பினும், ஏட்டு சொர்ணராஜ் அந்த நபரிடம் தனியாக சென்று, கையில் பணம் ஏதேனும் இருந்தால் கொடுத்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுள்ளார். அதற்கு அந்த நபர், "கையில் ரொக்கம் இல்லை, ஜிபே மூலம் அனுப்புகிறேன்" என கூறி எண் கேட்டுள்ளார். உடனே ஏட்டு சொர்ணராஜ் ஒரு செல்போன் எண்ணை கொடுத்து, அதற்கு பணத்தை அனுப்புமாறு கூறியுள்ளார். ஆடியோ சமூக வலைதளங்களில் பரவல்தொடர்ந்து அந்த நபர், "பணம் வந்துவிட்டதா?" என கேட்க, ஏட்டு சொர்ணராஜ் "இன்னும் பணம் வரவில்லை" என்று கூறும் உரையாடலின் ஆடியோ பதிவு சமூக வலைதளங்களில் வெளியாகிதீயாகப் பரவியது.சஸ்பெண்ட் செய்து போலீஸ் கமிஷனர் உத்தரவுஇந்த விவகாரம் நெல்லை மாநகர போலீஸ்கமிஷனர்தேஷ்முக்சேகர்சஞ்சய்யின்கவனத்திற்கு சென்றது. இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிட்ட கமிஷனர், துறை ரீதியான நடவடிக்கை எடுத்து ஏட்டு சொர்ணராஜை உடனடியாக பணி இடைநீக்கம் (சஸ்பெண்ட்) செய்து உத்தரவிட்டார். இச்சம்பவம் போலீசார் இடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வார விடுமுறை; கொடைக்கானலில் குவியும் சுற்றுலா பயணிகள் போக்குவரத்து நெரிசலால் வாகன ஓட்டிகள் அவதி

திண்டுக்கல், அக். 4




மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலுக்கு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி கேரளா உள்ளிட்ட அண்டை மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் பரவலான மழை பெய்து வந்தாலும், வெயிலின் தாக்கம் தொடர்ந்து நீடித்து வருவதால் மக்கள் குடும்பத்துடன் மலைவாசஸ்தலங்களுக்கு செல்ல அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இன்று வார விடுமுறை என்பதால் தமிழகம் மற்றும் கேரளாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வந்தனர்.இதனிடையே தமிழகத்தில் பள்ளிகளுக்கு காலாண்டு விடுமுறை விடப்பட்டுள்ளதாலும்,காந்தி ஜெயந்தி தொடர்விடுமுறை காரணமாகவும் கொடைக்கானலுக்கு வரும் சுற்றலா பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் கொடைக்கானலுக்கு செல்லும் மலைச்சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.குறிப்பாக கொடைக்கானல் நுழைவு பகுதியான வெள்ளி நீர்வழ்ச்சி முதல் நகரப்பகுதி வரை சுமார் 7 கிலோமீட்டர்தூரத்திற்கு வாகனங்கள்அணிவகுத்து ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றலா பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். மேலும், சாலைகளை அகலப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி போக்குவரத்தை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைகள் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகளில் இந்தி மொழியில் ஊர்ப் பெயர்கள்: மு.வீரபாண்டியன் கண்டனம்

சென்னை, அக். 4



தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகளில் இந்தி மொழியில் ஊர் பெயர்கள் எழுதப்பட்டதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.இது குறித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது; தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் நாசரேத் மாநில நெடுஞ்சாலையில் (SH93) வழிகாட்டிப் பலகையில் இந்தி மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டின் இரு மொழிக்கொள்கைக்கு எதிரானது. தமிழ்நாடு அரசின் இந்தி திணிப்பை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.இதை வெறும் நிர்வாகத் தவறாக எடுத்துக்கொள்ள இயலாது. இது தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை, மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிரான செயலாகும்.இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின்345ஆவதுபிரிவுமாநிலத்தின் அலுவல் மொழியைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மாநிலச் சட்டமன்றத்திற்கு வழங்குகிறது. தமிழ்நாடு அலுவல் மொழிச் சட்டம்1956, தமிழ் மொழியை தமிழ்நாட்டின் அலுவல் மொழியாக அங்கீகரித்துள்ளது. மத்திய அரசின் அலுவல் மொழிகள் (மத்திய அரசின் அலுவல் பயன்பாட்டிற்கான) விதிகள் 1976, தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது.தேசிய நெடுஞ்சாலைகளுக்கான மத்திய அரசின் வழிகாட்டுதல்களை மாநில நெடுஞ்சாலைகளில் தானாகவேநடைமுறைப்படுத்தமுடியாது.அவ்வாறிருக்க, அதை மாநில நெடுஞ்சாலையில் தவெக அரசு நடைமுறை படுத்துவதேன்?மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டம் என்பதற்காக, மாநிலத்தின் மொழிக் கொள்கையைப் புறக்கணிக்க முடியுமா?இந்திப் பெயர்களைச் சேர்க்க உத்தரவிட்டது யார்? இதற்கான அரசாணை அல்லது துறைசார் சுற்றறிக்கை உள்ளதா? உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்பட்டதா? இந்த விவரங்களைத் தமிழ்நாடு அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.இந்தித் திணிப்பில், தொடர்புடைய இரண்டு அதிகாரிகளைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்து, இந்தி எழுத்துகளை அகற்றியிருப்பதாக அரசு அறிவித்துள்ளது. இது போதுமானதல்ல. இப்பிரச்சனைக்குத்தீர்வுமல்ல.இருமொழிக்கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகள் மீது விசாரணை நடத்தப்படுவது அவசியமானது. இதற்குப் பின்னால் உள்ள நிர்வாக முடிவுகள், அனுமதிகள் மற்றும் பொறுப்புகளைமுழுமையாகவிசாரித்துஉண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்.மொழி என்பது வெறும் தொடர்புக்கான கருவி மட்டுமல்ல; அது மக்களின் வரலாறு,பண்பாடு,அடையாளம்மற்றும்உரிமையோடு இணைந்தது. இந்தியாவின் பன்மொழிப் பண்பாட்டை மதிப்பதற்குப் பதிலாக, இந்தி மொழியை மாநில மொழிகளின் மீது திணிக்கும் அணுகுமுறை தேசிய ஒருமைப்பாட்டுக்கும், கூட்டாட்சிக்கும் எதிரானதாகும். இது ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க. முன்னெடுக்கும் இந்துத்துவ அரசியலின்பண்பாட்டுத்திணிப்புமற்றும்மேலாதிக்கத்தை நிறுவும் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.மொழி மேலாதிக்கம் என்பது பண்பாட்டு மேலாதிக்கத்தின் ஒரு வடிவம்.பண்பாட்டுமேலாதிக்கத்தைஎதிர்த்துப்போராடிய மொழிஉரிமைப்போராட்டத்தின்விளைவேதமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை. இது தற்காலிக அரசியல் நிலைப்பாடு அல்ல.

இந்தித் திணிப்புக்கு எதிரான நீண்ட நெடிய மக்கள் போராட்டத்தின் விளைவாகும். அதைச் சீர்குலைக்கும் எந்தவொரு முயற்சியையும் அனுமதிக்க முடியாது. இந்தப் பின்னணியில் மாநில நெடுஞ்சாலைகளில் இந்தி எழுத்துக்களை சாதாரணமாகக் கடந்து செல்ல முடியாது. சாத்தான்குளம் நாசரேத் சாலைப் பலகை தொடர்பான நிர்வாக ஆணைகள், ஒப்புதல்கள் மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளைப் பொதுவெளியில் வெளியிட வேண்டும்.

இதற்குப் பொறுப்பான அனைத்து நிலை அதிகாரிகளின் பங்கையும் விசாரித்து, உண்மையான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும்.இந்தித் திணிப்பை எந்த வடிவத்திலும் ஏற்க முடியாது. தமிழ்நாட்டின் மொழி உரிமைகளையும், இருமொழிக் கொள்கையையும் பாதுகாப்பதில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை.இரு மொழிக்கொள்கையில் உறுதியாக இருப்பதாக அறிவித்துள்ள தவெக அரசு, தனது கொள்கையை மீறுவது ஏன் என்ற கேள்விக்கு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹவுரா கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயிலில் 10 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல்

கன்னியாகுமரி, அக் 4




மேற்கு வங்கத்தில் இருந்து கன்னியாகுமரி நோக்கி வந்த அதிவிரைவு ரெயிலில், நாகர்கோவில் ரெயில்வே போலீசார் நேற்று இரவு நடத்திய அதிரடி சோதனையில் கேட்பாரற்று கிடந்த 10 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழகத்தில் குட்கா, பான் மசாலா உள்ளிட்ட போதை புகையிலை பொருட்களுக்கு அரசு கடுமையான தடை விதித்துள்ளது. இந்த நிலையில் ரெயில்களில் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல்கள் கிடைத்தன. இதையடுத்து, வட மாநிலங்களில் இருந்து ரெயில்கள் மற்றும் பார்சல்கள் மூலம் தமிழகத்திற்குள் குட்கா கடத்தி வரப்படுவதைத் தடுக்க ரெயில்வே போலீசார் நேற்று (வெள்ளிக்கிழமை) இரவில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

மேற்குவங்கமாநிலம்ஹவுராவில்இருந்துகன்னியாகுமரி செல்லும் அதிவிரைவு ரெயில் நேற்று இரவு நாகர்கோவில் சந்திப்புரெயில்நிலையத்தைநோக்கிவந்துகொண்டிருந்தது. அப்போது, நாகர்கோவில் ரெயில்வே போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் ரெயிலின் பொதுப் பெட்டிகளில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ரெயிலின் பொதுப் பெட்டி ஒன்றில், இருக்கைக்கு அடியில் சந்தேகப்படும்படியாக ஒரு பை கேட்பாரற்றுக் கிடந்தது. போலீசார் அந்த பையை மீட்டுத் திறந்து சோதித்தபோது, அதற்குள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 10 கிலோ குட்கா மற்றும் போதை புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, கடத்தல் பொருட்களைப் பறிமுதல் செய்த போலீசார், போதைப்பொருட்களை ரெயிலில் கடத்தி வந்த மர்ம நபர்கள் யார்? எந்த ரெயில் நிலையத்தில் இருந்து இந்த பை கடத்தி வரப்பட்டது? என்பது குறித்து வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். வட மாநிலரெயில்களில்போதைப்பொருள்கடத்தல்அதிகரித்து வருவதால், நாகர்கோவில் வழியாக வரும் அனைத்து ரெயில்களிலும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக ரெயில்வே போலீசார் தெரிவித்துள்ளனர்.

# தாராபுரத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரின் பாரபட்சமான அணுகுமுறை: மு.வீரபாண்டியன் கண்டனம்

சென்னை, அக். 4

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நடத்தும் அலுவலரின் பாரபட்சமான அணுகுமுறைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையான கண்டனம்தெரிவித்துள்ளது.இதுதொடர்பாகஅக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:இருசக்கர வாகன பேரணிக்கு அனுமதி மறுப்பு; கண்டனம்தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடத்தப்படவிருந்த இருசக்கர வாகனப் பேரணிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி மறுத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அதே நாளில், அதே வழித்தடத்தில் ஆளும் கட்சியான த.வெ.க.விற்கு பேரணி நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதே வழித்தடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தவிருந்த இருசக்கர பேரணிக்கு மட்டும் அனுமதி மறுப்பதற்கு “அதே நாளில் ஆளும் கட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என்பதையே காரணமாகக் கூறுவது எந்த வகையிலும் நியாயமானதோ, சட்டரீதியானதோ அல்ல.சமச்சீர் களம் உறுதி செய்யப்பட வேண்டும்விதிமுறைகள் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சமமாகப் பொருந்த வேண்டும். ஒரு கட்சிக்கு அனுமதி வழங்கிவிட்டு, அதே நிபந்தனைகளில் மற்றொரு கட்சிக்கு அனுமதி மறுப்பது தேர்தல்களத்தில்சமமானவாய்ப்பைபறிக்கும்செயலாகும். தேர்தல் ஆணையத்தின் மாதிரி நடத்தை விதிகள் தேர்தல் நடவடிக்கைகளில் “சமச்சீர் களம்” உறுதி செய்யப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்துகிறது. காவல்துறை ஆணை; அதிகாரி தகவல்ஒரே பாதையில் பல கட்சிகள் பேரணி நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டால், அவற்றுக்கிடையே ஒருங்கிணைப்பு செய்து, போக்குவரத்துக்கும் சட்டம்ஒழுங்குக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஏற்பாடு செய்வதே சரியான நடைமுறையாகும். இதைப்பற்றி தொடர்பு கொண்டு கேட்டபொழுது, த.வெ.க. பிரசாரத்திற்கு அனுமதி அளித்துவிட்ட காரணத்தால், மற்றவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என்று எழுத்துப்பூர்வமான ஆணை தமிழ்நாடு காவல்துறை அனுப்பியுள்ளதாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.ஜனநாயக உரிமைஜனநாயகம் என்பது ஆளும் கட்சிக்கு மட்டுமேயான உரிமை அல்ல. எதிர்க்கட்சிகளின் குரலையும் அரசியல் உரிமைகளையும் பாதுகாப்பதேஉண்மையானஜனநாயகத்தின்அடையாளம். காவல்துறையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தும் எந்த முயற்சியும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆளும் கட்சியின் அதிகார ஆணவப்போக்கிற்கும் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் எதேச்சதிகாரப் போக்கிற்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது வலுவான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேர்தல் ஜனநாயகம்தேர்தல் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான வாய்ப்பை உறுதி செய்யவும் இந்திய தேர்தல் ஆணையம் உடனடியாகத் தலையிட வேண்டும். இது வெறும் ஒரு பேரணிக்கான அனுமதி தொடர்பான பிரச்சினை அல்ல. தேர்தல் நிர்வாகத்தின் நடுநிலைமை, நம்பகத்தன்மை மற்றும் போட்டியிடும் அனைத்து கட்சிகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுகிறதா என்ற அடிப்படை ஜனநாயகக் கேள்வியாகும்.மறுபரிசீலனைதேர்தல் நடத்தும் அலுவலர் உடனடியாக இந்த முடிவை மறுபரிசீலனை செய்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதே நாளில், சட்டம் ஒழுங்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு இருசக்கர வாகனப் பேரணி நடத்த அனுமதி வழங்க வேண்டும். ஆளும் கட்சிக்கு ஒரு விதி, எதிர்க்கட்சிக்கு வேறு விதி என்ற அணுகுமுறை ஜனநாயகத் தேர்தல் நடைமுறைக்கு எதிரானது.இருசக்கர வாகன பேரணிக்கு அனுமதி வழங்க வேண்டும்தேர்தல் அதிகாரிகள் எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவாகவோ எதிராகவோ இருப்பதாகத் தோன்றாத வகையில், முழுமையான நடுநிலையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் செயல்பட வேண்டும். இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருசக்கர வாகனப் பேரணி நடத்திட அனுமதி வழங்கிட வேண்டும் என, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, இந்தியத் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சத்தியபாமாவை உருவக்கேலி செய்து மு.க.ஸ்டாலின் பேசியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது ஜோதிமணி எம்.பி.



சென்னை, அக். 4

சத்தியபாமாவை உருவக்கேலி செய்து மு.க.ஸ்டாலின் பேசியிருப்பது அதிர்ச்சியளிப்பதாக ஜோதிமணி எம்.பி. தெரிவித்துள்ளார்.ஏற்றுக்கொள்ளமுடியாதுஇது தொடர்பாக, காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது; பெண்கள் பொதுவாழ்விற்கு வருவதும், பொதுவாழ்வில் தொடர்ந்து பயணிப்பதும் எளிதான செயல் அல்ல. பெண் என்பதனாலேயே தொடர்ச்சியாக பல்வேறு விமர்சனங்களுக்கும்., கேலிக்கும் உள்ளாவதை பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்ள நேரிடுகிறது. தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் திமுகவின் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாராபுரம் த.வெ.கவேட்பாளர்சத்தியபாமாவைஉருவக்கேலிசெய்து பேசியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.அரசியல் விமர்சனம் அல்லஒருபெண்ணை உருவக்கேலி செயவது அரசியல் விமர்சனம் அல்ல. இதுபோன்ற பேச்சுக்களை இன்றைய தலைமுறைப் பெண்கள் எளிதாக எடுத்துக்கொள்வதில்லை என்பதையும் ஆண் தலைவர்கள் உணர வேண்டும். பொதுவாழ்வில் பெண்களின் கண்ணியத்தைக் காப்பதில் ஆண்களுக்கும், குறிப்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீன் லாரியில் இலங்கைக்கு கடத்த முயன்ற 318 கிலோ கஞ்சா பறிமுதல்: 3 பேர் கைது



தூத்துக்குடி, அக். 4

இலங்கைக்குக் கடத்துவதற்காக மீன் ஏற்றி செல்லும் லாரியில் கடத்தி வரப்பட்ட 318 கிலோ கஞ்சாவை தூத்துக்குடி மாவட்டம், குளத்தூர் பகுதியில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீசார் கைப்பற்றி, இது தொடர்பாக 3பேரைகைதுசெய்தனர்.ஆந்திராவில்இருந்துஇலங்கைக்கு கஞ்சா கடத்தல்ஆந்திர மாநிலத்தில் இருந்து மீன் ஏற்றிச் செல்லும் கண்டெய்னர் லாரி மூலம் இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில்,

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு (OCIU Organised Crime Intelligence Unit) போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேஷ் தலைமையிலான போலீசார் விளாத்திகுளம் காவல் உட்கோட்டம், குளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புளியங்குளம் கிராமப் பகுதியில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.அப்போது அப்பகுதியில் முன்னால் வழி காட்டிச் சென்ற ஒரு கார் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த மீன் ஏற்றிச் செல்லும் கண்டெய்னர் லாரியை மறித்து போலீசார் சோதனை செய்தனர். அந்த சோதனையில் லாரியில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த 318 கிலோ கஞ்சா பாக்கெட்டுகள் கண்டறியப்பட்டு பறிமுதல்செய்யப் பட்டன.3 பேர் கைது இந்த சம்பவம் தொடர்பாக காரில் வந்த திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜோஷ்வாகணராஜ் (வயது 47), மற்றும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த தன்வேல்(51), யாதலா ஸ்ரீனிவாஸ் கல்யாண்(24) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 318 கிலோ கஞ்சா, ஒரு கார் மற்றும் கண்டெய்னர் லாரி பறிமுதல் செய்யப்பட்டது.போலீசார் விசாரணைகைது செய்யப்பட்ட நபர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா மற்றும் வாகனங்களையும் ஒழுங்கமைக்கப்பட்டகுற்றப்புலனாய்வுப்பிரிவுபோலீசார் மேல் நடவடிக்கைக்காக கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர். இச்சம்பவம் குறித்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தீவன உற்பத்தி பாதிப்பால் கோழி இறைச்சி விலை ரூ.500ஐ எட்டும் அபாயம்!



சென்னை, அக். 4

எத்தனால் தயாரிப்பதற்காக மக்காச்சோளம் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதால், கோழித் தீவன உற்பத்தி பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கோழி இறைச்சியின் விலை கிலோ ரூ.500ஐ எட்டும் அபாயம் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பதை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. இதற்கான எத்தனால் உற்பத்தியில் மக்காச்சோளம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் எத்தனால் உற்பத்தியில் மக்காச்சோளத்தின் பங்கு தற்போது 37 சதவீதத்தை எட்டியுள்ளது.

அதேவேளையில், கோழித் தீவனத்தில் 55 முதல் 60 சதவீதம் வரை மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எரிபொருள் உற்பத்தி மற்றும் கோழி வளர்ப்புத் துறை என இரு துறைகளிலும் மக்காச்சோளத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. தேவை அதிகரித்துள்ள நிலையில், கடந்த சில ஆண்டுகளாக மக்காச்சோளத்தின் விலையும் உயர்ந்து வருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிலோ மக்காச்சோளம் ரூ.14 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில்,

தற்போது சந்தையில் ரூ.25 முதல் ரூ.28 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில பகுதிகளில் இதன் விலை ரூ.32 வரை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. மக்காச்சோளத்தின் விலை உயர்வின்தாக்கம் கோழித்தீவனத்தின்விலையிலும் எதிரொலித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு கிலோ ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்ட கோழித் தீவனத்தின் விலை, செப்டம்பர் மாதத்தில் ரூ.30ஐ தாண்டியுள்ளது.

கோழி உற்பத்திச் செலவில் சுமார் 65 முதல் 70 சதவீதம் வரை தீவனத்திற்கே செலவிடப்படுவதால், தீவன விலை உயர்வு நேரடியாக கோழி மற்றும் முட்டை விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஏற்க னவே எத்தனால் உற்பத் திக்கான தேவை யால் மக்காச் சோளத் துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வரும் நிலையில், எல் நினோ தாக்கமும் கோழி வளர்ப்புத் துறைக்கு கூடுதல் சவாலாக அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

மோசமான மழைப்பொழிவு மற்றும் பலவீனமான பருவமழை காரணமாக இந்த ஆண்டு மக்காச்சோள விளைச்சல் கணிசமாகக் குறையும் அபாயம் இருப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் முட்டையின் விலை 35 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. பண்ணைகளில் ஒரு முட்டையின் விலை ரூ.6ஐ எட்டியுள்ள நிலையில், சில்லறை சந்தையில் ரூ.7 முதல் ரூ.9 வரை விற்பனை செய்யப்படுகிறது.

வரவிருக்கும் குளிர்காலத்தில் முட்டைக்கான தேவை அதிகரித்தால், அதன் விலை மேலும் உயரக்கூடும் என்று முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தீவன விலை உயர்வு, மக்காச்சோளத் தட்டுப்பாடு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றின் தாக்கத்தால் கோழி இறைச்சியின் விலையும் அதிகரிக்கும் சூழல் உருவாகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, கோழி இறைச்சி விலை கிலோ ரூ.500 வரை உயரக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியை சமாளிக்க நாட்டில் மக்காச்சோள உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. மேலும், எத்தனால் உற்பத்திக்கு மக்காச்சோளத்திற்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய மூலப்பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் கோழி வளர்ப்புத் துறையில் ஏற்படும் பாதிப்பை குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நெல்லையில் பாலியல் குற்றவாளிகள் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது





நெல்லை, அக். 4

நெல்லை மாநகரில் குழந்தைகளை பாலியல் ரீதியாக கொடுமைப்படுத்திய இரண்டு வேறு வழக்குகளில் தொடர்புடையபாலியல்குற்றவாளிகள் 2 பேர் குண்டர்தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டையைச் சேர்ந்த செல்வகுமார் மகன் சாம்ராஜ் (வயது 20), அருள்ராஜ் மகன் பாஸ்கர்(50) ஆகிய 2 பேரும் நெல்லை மாநகரில் குழந்தைகளை பாலியல் ரீதியாக கொடுமைப்படுத்தி, அதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மனதில் பாலியல் தாக்குதல் குறித்த பீதியையும், பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான பாதுகாப்பற்ற உணர்வையும் ஏற்படுத்தி, பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டு வந்த, இரண்டு வெவ்வேறு வழக்குகளில் சம்மந்தப்பட்ட "பாலியல் குற்றவாளிகள்" ஆவர்.

மேற்சொன்ன 2 பேரும் பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி இன்று (3.10.2026) குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

# இன்று இரவு பிரகாசமாக தோன்றும் 'சனி கிரகம்' வெறும் கண்ணால் பார்க்கலாம்!



சென்னை, அக். 4

விண்வெளியில் நாளை ஒரு அபூர்வ மற்றும் கண்கொள்ளாக் காட்சி அரங்கேற உள்ளது. சூரிய குடும்பத்தின் அழகிய கிரகமான சனி கிரகம், நாளை விண்வெளியில் வழக்கத்தை விட மிகவும் பிரகாசமாகவும், பெரியதாகவும் காட்சியளிக்கப்போகிறது.சூரியனுக்கும்சனிக்கும்நடுவில் பூமிசூரியன், பூமி மற்றும் சனி கிரகம் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது இந்த அரிய நிகழ்வு ஏற்படுகிறது. அதாவது, சூரியனுக்கும் சனி கிரகத்திற்கும் நேர் நடுவே பூமி வரும். வானியலில் இது 'சனி கிரகத்தின் எதிர்நிலை' என்று அழைக்கப்படுகிறது. இதன்காரணமாக, சனி கிரகம் பூமிக்கு மிக அருகில் வந்து, சூரிய ஒளி அதன் மீது முழுமையாக படுவதால் இரவு முழுவதும் ஜொலிக்க போகிறது. இது 2026ம் ஆண்டின் மிகச்சிறந்த, பிரம்மாண்டமான விண்வெளி காட்சிகளில் ஒன்றாக அமைய உள்ளது.126 கோடி கிலோமீட்டர் தூரம்நாளை மாலை 5.30 மணி அளவில், சனி கிரகம் பூமியில் இருந்து சுமார் 126 கோடி கிலோமீட்டர் தொலைவில் இருக்கும்போதுஇந்தநிகழ்வுதுல்லியமாகதொடங்குகிறது. நாளை மாலை சூரியன் மறையும் அதே நேரத்தில், கிழக்கு வானில் சனி கிரகம் உதிக்கும். பின்னர் விடிய விடிய இரவு முழுவதும் தெளிவாக காட்சியளித்து, மறுநாள் காலை சூரிய உதயத்திற்கு முன்பு மேற்கு வானில் மறையும். வெறும் கண்ணால் பார்க்கலாம்பொதுவாக சனி கிரகம் 0.3 பிரகாச அளவில் மட்டுமே ஒளிரும் தன்மை கொண்டது. ஆனால், நாளை வெறும் கண்ணால் பார்க்கும் போதே, வானில் மின்னும் ஒரு பிரகாசமான மஞ்சள் நிறப்புள்ளி போல இது பெரிதாக தெரியும். சாதாரண தொலைநோக்கி மூலம் பார்த்தால், சனி கிரகத்தை சுற்றியுள்ள அழகிய வளையங்களையும், அதன் சில துணைக்கோள்களையும் மிக தெளிவாக கண்டு ரசிக்கலாம்.பார்ப்பது எப்படி?நாளை மாலை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு, பொதுமக்கள் கிழக்கு வானத்தை நோக்கினால் பிரகாசமான, அசையாமல் நிலையாக தெரியும் ஒரு மஞ்சள் நிற புள்ளியை காணலாம். அதுவே சனி கிரகம். நகரத்து வெளிச்சம் மற்றும் மின்விளக்குகளின் ஒளி இல்லாத இருட்டான, திறந்தவெளி மொட்டை மாடி அல்லது மைதான பகுதிகளில் இருந்து பார்த்தால், இந்த விண்வெளி அதிசயத்தை மிகவும் தெளிவாகவும், அழகாகவும் ரசிக்க முடியும்.இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறி இருப்பதாவது:29.5 ஆண்டுகள் ஆகும்பூமி ஆண்டுக்குஒருமுறைசூரியனைசுற்றிவருகிறது. ஆனால் சனி ஒருமுறை சூரியனைசுற்றிவர 29.5 ஆண்டுகள் ஆகும். பூமியின் சுற்றுப்பாதை சிறியது, மேலும் அது சனியை விட வேகமாக நகர்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை, பூமிசனிக்கும், சூரியனுக்கும் இடையில் கடந்து செல்கிறது. எதிர்நிலைவானியலாளர்கள் இதை 'எதிர்நிலை' என்று அழைக்கிறார்கள்.சனிக்கிரகத்தை காண்பதற்கு, இந்த ஆண்டின்சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாக நாளை அமையும். இவ்வாறு அதில் கூறினர்.சனி கிரகம் எதிர்நிலை 378 நாட்களுக்கு ஒருமுறை நிகழ்கிறது. இதற்கு முந்தைய நிகழ்வு கடந்த 2025ம் ஆண்டு செப்டம்பர் 21ந் தேதி நடந்தது. அடுத்த நிகழ்வு 2027ம் ஆண்டு அக்டோபர் 16 ந்தேதி நடைபெறும்.

# சார்பதிவாளர் அலுவலகங்கள் நவம்பர் 1ந்தேதி முதல் வார நாட்களில் மட்டுமே இயங்கும் சனிக்கிழமை கட்டாயப்பணி ரத்து




சென்னை, அக். 4

தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் ஜெ. குமரகுருபரன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:“கடந்த 2022ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, அலுவலகங்களில் பணியாற்றும் பொதுமக்கள் ஆவணப்பதிவு மேற்கொள்ள ஏதுவாக வார விடுமுறை நாளான சனிக்கிழமைகளில் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படவும், அந்த அலுவலகங்களில் அதன் வேலைப்பளுவுக்கு தகுந்தவாறு தேவையான பணியாளர்கள் பணியாற்ற சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்களுக்கு உத்தரவிடவும் பதிவுத்துறை தலைவருக்கு அனுமதியளிக்கப்பட்டது.கடந்த இந்நிலையில், செப்டம்பர் 8ந்தேதி தமிழக அரசுக்கு பதிவுத்துறை தலைவர் எழுதிய கடிதத்தில், "எங்கிருந்தும் பதிவு என்ற குறிக் கோளை எய்தும் வகையில், சார்பதிவாளர்கள் ஆவணப் பதிவு மட்டுமின்றி பல்வேறு கூடுதல் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆவணப்பதிவு காரணமாக சனிக்கிழமைகளில் அலுவலகப்பணிகளில் பின்னடைவு ஏற்படுகிறது. வரும் காலங்களில் அனைத்து ஆவணங்களும் வருகையில்லா பதிவு, காகிதமில்ல முறையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதால், தற்போது 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள சனிக்கிழமை கட்டாயப்பணி என்பதை கைவிடலாம் என்ற சட்டப்பேரவையில் அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பை நவம்பர் 1ந்தேதி முதல் செயல்படுத்தலாம். இதற்காக 2022ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும்" என்று கோரியிருந்தார்.இதைப் பரிசீலித்த தமிழக அரசு, பதிவுத்துறை தலைவரின் கருத்துகளை ஏற்று, சனிக்கிழமைகளில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் நவம்பர் 1ந்தேதி முதல் வார நாட்களில் மட்டுமே செயல்படும். சனிக்கிழமை கட்டாயப்பணி முறையை கைவிட முடிவெடுத்து உத்தரவிடப்படுகிறது.”இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.

# மயிலாப்பூரில் விதவிதமான வடிவங்களில் கண்ணை கவரும் கொலு பொம்மைகள்.. களைகட்டும் விற்பனை



சென்னை, செப். 4

நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு, சென்னையின் பாரம்பரியமிக்க பகுதியான மயிலாப்பூரில் கொலு பொம்மைகளின் விற்பனை விறுவிறுப்பாக களைகட்டியுள்ளது. கபாலீஸ்வரர் கோவில் மாடவீதிகளில் அணிவகுத்து நிற்கும் விதவிதமான வண்ணப் பொம்மைகள் பொதுமக்களையும் பக்தர்களையும் பெரிதும் கவர்ந்து வருகின்றன.

நவராத்திரி பண்டிகை, நடப்பு ஆண்டில் வருகின்ற 11 ந்தேதி தொடங்கி 19ந்தேதி வரையிலான 9 நாட்கள் கொண்டாடப்படும். இந்த விழாவில் பொதுமக்கள் தங்கள் வீட்டில் கொலு பொம்மைகளை அடிக்கி வைத்து சாமி கும்பிட்டு மகிழ்ச்சியடைவர். இந்த நிலையில் ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி பண்டிகையின் போது மயிலாப்பூர் மாடவீதிகள் பொம்மைச் சந்தையாக மாறுவது வழக்கம். இந்த ஆண்டும், பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், சாலையின் இருபுறமும் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பொம்மைகள் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு விற்பனையில், வழக்கமான அம்மன் சிலைகள், தசாவதாரம், அஷ்டலட்சுமி செட்கள் மற்றும் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகளுடன், பல்வேறு புதுமையான வடிவங்களிலான பிள்ளையார் சிலைகளும், ஆன்மீகக் கதைகளை விளக்கும் பொம்மைத் தொகுப்புகளும் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, கொல்கத்தா மற்றும் உள்ளூர் கைவினைஞர்களால் களிமண் மற்றும் காகிதக் கூழ் மூலம் நேர்த்தியாக செய்யப்பட்டு, கண்கவர் வண்ணங்கள் தீட்டப்பட்ட பொம்மைகள் மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

சாமானியமக்கள்முதல்அனைவரும்வாங்கும்வகையில், சிறிய அளவிலான பொம்மைகள் ரூ. 100 முதல் விற்பனை செய்யப்படுகின்றன. பொம்மைகளின் அளவு, வேலைப்பாடு மற்றும் தரத்திற்கு ஏற்ப விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாடவீதிகளில் குடும்பம் குடும்பமாகவரும்பொதுமக்கள்,தங்களுக்குப்பிடித்தமான பொம்மைகளை ஆர்வத்துடன் பேரம் பேசி வாங்கிச் செல்கின்றனர்.

இதனால்இப்பகுதியில்திருவிழாக்கோலம்பூண்டுள்ளது. மாடவீதிகள் மட்டுமின்றி, சென்னை அண்ணா சாலையில் உள்ள புகழ்பெற்ற பூம்புகார் விற்பனை நிலையத்திலும் சிறப்புநவராத்திரிகொலுபொம்மைகள்கண்காட்சி மற்றும் விற்பனை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் 4 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள், பார்கள் மூடல்: மாவட்ட நிர்வாகம் உத்தரவு!




செங்கல்பட்டு, அக். 4

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி, செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக டாஸ்மாக் கடைகள் மற்றும் தனியார் பார்களை மூட மாவட்ட நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் மதுப்பிரியர்கள் முன்கூட்டியே மதுபானங்களை வாங்கி வைக்க திட்டமிட்டு வருகின்றனர்.மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையை ஒட்டி, செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் சட்டம்ஒழுங்கை பராமரிக்கும் வகையில் மதுக்கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, நாளை காலை 10 மணி முதல் வாக்குப்பதிவு நாளான அக்டோபர் 6ஆம் தேதி நள்ளிரவு வரை தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள் மூடப்படும்.வாக்கு எண்ணிக்கை நாளிலும் மூடல்இதனை தொடர்ந்து, பதிவான வாக்குகள் எண்ணப்படும் நாளான அக்டோபர் 9ஆம் தேதியும் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டிருக்கும். இந்த 4 நாட்களிலும் அரசு டாஸ்மாக் கடைகள், அதனுடன் இணைந்த பார்கள் மற்றும் தனியார் ஓட்டல்களில் இயங்கி வரும் மதுபான பார்கள் அனைத்தும் முற்றிலும் மூடப்பட்டிருக்க வேண்டும்.விதிகளை மீறி எவரேனும் மது விற்பனையில் ஈடுபட்டால் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
04.10.2026

# சென்னை மெட்ரோ ரெயில் டிக்கெட் எடுப்பதில் சிக்கல் பயணிகள் தவிப்பு



சென்னை, அக் .4

சென்னை மெட்ரோ ரெயில் பயணம் மேற்கொள்கிறவர்கள் ஆன்லைனில் டிக்கெட் புக் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஆன்லைனில் பயணச் சீட்டு பெற முடியாது எனறும் மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை பொது போக்குவரத்தில் முக்கியபங்குவகிக்கும் சென்னைமெட்ரோ ரெயிலில் தினமும் லட்சக்கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். இதில் 30 சதவிகிதத்துக்கு அதிகமான பயணிகள் ஆன்லைனில் டிக்கெட் எடுக்கின்றனர். அதாவது மெட்ரோவில் பயணம் மேற்கொள்ள விரும்புகிறவர்கள், வீட்டிலிருந்து கிளம்பு போதே ஆன்லைனில் டிக்கெட்டை பெற முடியும்.

அதற்கான பல வசதிகளை மெட்ரோ நிர்வாகம் வழங்கியுள்ளது. அதாவது வாட்ச் அப், க்யூ ஆர் கோடு, மெட்ரோ இணையதளம், ஒன் என் சி டிகள் மூலமாக டிக்கெட் எடுத்து கொள்ளலாம். இதன் மூலமாக பயணிகள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழல் இருக்காது. இதனால் இந்த சேவையை பலரும் பயன்படுத்தி வந்தனர்.

இந் நிலையில் செல்போன் வழியாக ஆன் லைன் டிக்கெட்டுகள் பெறுவது, தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக தற்போது வேலை செய்யாததால் பயணிகள் தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, மொபைல் செயலி மூலம் பெறப்பட்டவை உள்பட இணையவழி டிக்கெட்டுகள் (QR டிக்கெட்டுகள்) தற்காலிகமாக வழங்கப்படவில்லை.

அடுத்தஅறிவிப்புவரும்வரை, பயணிகள் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட்கவுண்டர்களில் டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோளாறைச் சரிசெய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் ஏற்படும் சிரமத்திற்கு CMRL வருத்தம் தெரிவிக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா கூட்டணி கூட்டத்தில் முதல்முறையாக பங்கேற்கும் த.வெ.க..!



சென்னை, அக். 4

சென்னையில் காங்கிரஸ் தலைமையில் நடைபெறும் இந்தியா கூட்டணி கூட்டத்தில் த.வெ.க. பங்கேற்க உள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் தன்னிச்சையாக செயல்பட்டதாகவும், ஏராளமான வாக்காளர்களை நீக்கியதாகவும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இதற்காக காந்தி ஜெயந்தி நாளில், ஞானேஷ்குமார் பதவி விலகக்கோரி டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தப் போவதாக ஆம் ஆத்மி கட்சியும், இந்திய மாணவர் சங்கம், இந்திய தேசிய மாணவர் சங்கம், அகில இந்திய மாணவர் சங்கம் போன்ற மாணவர் அமைப்புகளும் அறிவித்தநிலையில், அனுமதி இன்றி போராட்டம் நடத்த முயன்றதாக அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கண்டித்து போராட்டம் நடத்துவது தொடர்பாக சென்னையில் இன்று இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

சென்னை சத்தியபவனில் காலை 11 மணியளவில் நடைபெறவிருக்கும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியா கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், வி.சி.க., இடதுசாரிகள், முஸ்லிம் லீக், ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த சூழலில், இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் முதன்முறையாக த.வெ.க.வும் பங்கேற்க உள்ளது. ஞானேஷ்குமாரை நீக்கக் கோரும் கூட்டத்தில் முதன்முறையாக த.வெ.க. சார்பில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா மற்றும் மரிய வில்சன் ஆகியோர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# திமுகவினர் கூறும் தவறான தகவல்களை பெ. சண்முகம் பேசி வருகிறார் சிடிஆர் நிர்மல்குமார்




கோவை, அக். 4

கோவை விமான நிலையத்தில் அமைச்சர் சிடி ஆர் நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஸ்டாலின் தன்னுடைய உண்மையான முகத்தை நேற்று பிரச்சாரத்தில் வெளிப்படுத்தி இருந்தார். தந்தையும், மகனும் தம் மனதில் இருப்பது மற்றும் உண்மையான முகத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இனி எந்த தேர்தலிலும் வெற்றி பெறப்போவது கிடையாது. எல்லா தேர்தலிலும் தோல்வி தான்.

மன்னிப்பு கேட்க வேண்டும்.

முகஸ்டாலின் பேச்சு பற்றி தேர்தல் ஆணையத்தில் புகார் தருவோம். விரக்தியில் பேசி வருகின்றனர். சமூகத்துக்கு திமுகவினர் கேடு விளைவிக்கின்றனர். இவர்கள் விரட்டி அடிக்கப்பட வேண்டிய நபர்கள். முக ஸ்டாலினும், உதயநிதியும் தங்கள் வக்கிரத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். பட்டியலின பெண் குறித்து ஸ்டாலின் மோசமாக பேசி இருக்கிறார். ஸ்டாலின்தரம்தாழ்ந்துபேசத்தொடங்கிஇருக்கிறார். தவெக பெண் வேட்பாளரை உருவகேலி செய்த ஸ்டாலின் பொதுவெளியில் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தவெக சார்பில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை. திமுகவினர்கூறும்தவறான தகவல்களை பெ.சண்முகம் பேசி வருகிறார். தவெக சார்பில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது என்றால் அதனை பெ. சண்முகம் நிரூபிக்க வேண்டும். எஸ்ஐஆர் நடவடிக்கைக்கு எதிராக தவெக சார்பில் போராட்டம் நடைபெற்றது. எடப்பாடி பழனிசாமிக்கு இனி எப்போதும் வெற்றி கிடைக்காது.

திமுக, அதிமுக, பாஜக இணைந்து தேர்தலை சந்திக்கும் நிலை வரும்" என்றார். முன்னதாக தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில் திமுக, அதிமுக, தவெக என மூன்று கட்சிகளும் பணம் கொடுப்பதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ சண்முகம் கூறியிருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (04.10.2026)

**மேஷம்:** பணிகளில் வேகம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஆதரவு கிடைக் கும்.

**ரிஷபம்:** பொருளாதார விஷயங்களில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். உடல் மற்றும் மன ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங் கள்.

**மிதுனம்:** நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களால் நல்ல வாய்ப்புகள் வரலாம். முக்கிய பேச்சுவார்த்தைகளில் பொறுமை கைகொடுக்கும்.

**கடகம்:** குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கலாம். பழைய பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பு உள்ளது. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

**சிம்மம்:** உங்கள் திறமையை வெளிப்படுத்தும் சூழல் அமையும். வேலை தொடர்பான பாராட்டு கிடைக்கலாம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும். பண விஷயங்களில் தெளிவான முடிவுகள் எடுக்கலாம். உறவுகளில் இனிமையான மாற்றம் ஏற்படலாம்.

**துலாம்:** புதிய தொடர்புகள் பயனுள்ளதாக அமையலாம். தொழில் அல்லது வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டிய நாள். செலவுகளை கண்காணிக்கவும்.

**விருச்சிகம்:** தடைப்பட்டிருந்த காரியம் மீண்டும் தொடங்கலாம். பணவரவு தொடர்பான நம்பிக்கை ஏற்படும். உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** பயணம் அல்லது வெளியிடத் தொடர்பான வேலைகள் அமையலாம். கற்றல் மற்றும் புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்:** பொறுப்புகள் அதிகரித்தாலும் அவற்றை திறம்பட சமாளிக்க முடியும். பணியில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கலாம். உடல்நலத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய சிந்தனைகள் செயல்படுத்த ஏற்ற நாள். நண்பர்கள் மூலம் ஆதரவு கிடைக்கலாம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம்.

**மீனம்:** மனதில் இருந்த குழப்பங்கள் குறையலாம். குடும்ப உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

# தமிழகத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அபாயம்: 14 மாவட்டங்களில் ஏரிகள் வறண்டன



சென்னை, அக். 4

வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், தமிழகத்தில் நீர்வளத்துறை பராமரிப்பில் உள்ள 4,887 ஏரிகள் நீரின்றி வறண்டுள்ளன. இதனால் 14 மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் நீர்வளத்துறை பராமரிப்பில் 14,141 ஏரிகள் உள்ளன. தென்மேற்கு பருவமழை இயல்பை விட குறைவாக பெய்ததால், பல்வேறு மாவட்டங்களில் நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாநிலம் முழுவதும் 4,887 ஏரிகள் வறண்டு கிடக்கின்றன. குறிப்பாக கடலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம், விருதுநகர் ஆகிய 14 மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் ஏரிகள் அதிக அளவில் வறண்டுள்ளதால், நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் விவசாயம் மட்டுமின்றி பொதுமக்களின் குடிநீர் தேவையையும் சமாளிப்பதில் சிக்கல் ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

# மல்யுத்தம்: வெள்ளி வென்ற அந்திம் பங்கால்



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவு குத்துச்சண்டை இறுதிப்போட்டியில் இந்தியாவின் பர்வீன் ஹூடா, சைனீஸ் தாய்பேவைச் சேர்ந்த முன்னாள் உலக சாம்பியன் சென் நியென்சின்ஐ 32 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம், ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் குத்துச்சண்டை வரலாற்றில் தங்கப் பதக்கம் வென்ற 3வது இந்திய வீராங்கனை என்ற பெருமையை பர்வீன் ஹூடா பெற்றுள்ளார். மேலும், நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா வென்றுள்ள 13வது தங்கப் பதக்கம் இதுவாகும்.

கடந்த ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியதைத் தொடர்ந்து, அவர் வென்ற வெண்கலப் பதக்கத்தை இழக்க நேரிட்டது. அந்தப் பின்னடைவுக்குப் பிறகு மீண்டும் களத்திற்கு திரும்பிய பர்வீன், தற்போது ஆசிய விளையாட்டில் தங்கப் பதக்கத்தை வென்று தனது திறமையை நிரூபித்துள்ளார்.

# 3வது ஒருநாள் போட்டி கே.எல்.ராகுல் அதிரடி சதம்... இந்தியா 351 ரன்கள் குவிப்பு




3வது ஒருநாள் போட்டியில் கே.எல்.ராகுல் அதிரடி சதம் விளாசினார்.

இந்தியா வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான 3வது ஒருநாள் போட்டி நியூ சண்டிகரில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தது.

தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் முதலில் பேட்டிங் செய்யாத இந்திய அணி, இந்தப் போட்டியில் முதன்முறையாக பேட்டிங் செய்தது. ஆனால், தொடக்கத்திலேயே இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ஜெய்டன் சீல்ஸ் வீசிய பந்தில் சுப்மன் கில் தனது விக்கெட்டை இழந்தார். தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி, தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஆட்டமிழந்து 'கோல்டன் டக்' ஆனார்.

இதையடுத்து இணைந்த ரோஹித் சர்மா ருதுராஜ் கெய்க்வாட் ஜோடி, இந்திய அணியை சரிவில் இருந்து மீட்டது. இருவரும் சிறப்பாக விளையாடி ரன்களைக் குவித்தனர்.

சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ரோஹித் சர்மா, 85 பந்துகளில் 92 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய ருதுராஜ் கெய்க்வாட், 69 பந்துகளில் 57 ரன்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார்.

இதன்பின்னர் களமிறங்கிய கே.எல். ராகுல் அதிரடியாக விளையாடி இந்திய அணியின் ஸ்கோரை உயர்த்தினார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ராகுல், ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 9வது சதத்தை பதிவு செய்து அசத்தினார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த அவர், 87 பந்துகளில் 129 ரன்கள் குவித்தார்.

50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 351 ரன்கள் எடுத்துள்ளது.

இதையடுத்து, 352 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் அணி களமிறங்க உள்ளது.

# ஆசிய விளையாட்டு: 21 தங்கத்துடன் பதக்கப்பட்டியலில் 4ம் இடம் பிடித்த இந்தியா




ஆசிய விளையாட்டு போட்டிகளில் 21 தங்கத்துடன் இந்தியா பதக்கப்பட்டியலில் 4ம் இடம் பிடித்துள்ளது.

ஆசிய விளையாட்டு போட்டிகள் ஜப்பானில் நடைபெற்று வருகிறது. இதில் 46 நாடுகள் கலந்து கொண்டுள்ளன. கடந்த மாதம் 19ம் தேதி தொடங்கிய ஆசிய விளையாட்டு போட்டிகள் நாளை நிறைவடைய உள்ளது. பெரும்பாலான போட்டிகள் நிறைவடைந்த நிலையில் நாளை நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இந்நிலையில், ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 21 தங்கத்துடன் பதக்கப்பட்டியலில் 4ம் இடம் பிடித்துள்ளது.

அதன்படி, ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என மொத்தம் 85 பதக்கங்களுடன் பட்டியலில் 4ம் இடத்தை பிடித்து இத்தொடரை நிறைவு செய்துள்ளது.

அதேவேளை, 169 தங்கம், 89 வெள்ளி, 83 வெண்கலம் என 341 பதக்கங்களுடன் பட்டியலில் சீனா முதல் இடம் பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏஐ மூலம் பாடலில் ஆபாச காட்சி: யாரையும் விட மாட்டேன் ஜூனியர் என்டிஆர்



ஏஐயின் தவறான பயன்பாட்டிற்கு எதிராக அனைத்து மாநில அரசுகளும், இந்திய அரசும் நடவடிக்கை எடுத்து, கடுமையான விதிமுறைகளைக் கொண்டு வர வேண்டும் என்று நடிகர் ஜூனியர் என்டி ஆர் தெரிவித்துள்ளார்.

ஜூனியர்என்டி ஆர்நடிப்பில் உருவான 'தேவரா' திரைப்படம், கடந்தாண்டு திரையரங்குகளில் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது. ஆனால், இப்படத்தில் இடம்பெற்ற சுட்டமல்லி பாடல் கோடிக்கணக்கான பார்வைகளைப் பெற்று ஹிட் அடித்தது. அப்பாடலில் நடிகை ஜான்வி கபூர் கவர்ச்சியாக நடன அசைவுகளைக் கொடுத்திருப்பார்.

இந்த நிலையில், இப்பாடலை ஏஐ மூலம் போலியாக சித்திரித்து உண்மையான பாடலில் இடம்பெறாத மோசமான ஆபாச காட்சிகளை உருவாக்கி சிலர் சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இதனால், ஜூனியர் என்டி ஆர் உள்பட படக்குழுவினர் அதிர்ச்சியடைந்தனர்.

இதுகுறித்துஜூனியர்என்டி ஆர்பதிவொன்றைவெளியிட்டுள்ளார். அதில், "பெண்களைத்தாயாகவும்தெய்வமாகவும் மதிக்கும் நாட்டில், "மாத்ருதேவோ பவ" என்பது வெறும் வார்த்தை மட்டுமல்ல; அது நமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது. ஆனால், சிலர் கீழ்த்தரமாகச் சென்றுவிட்டார்கள். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி ஒரு பெண்ணை மிகவும் கேவலமான முறையில் அவமதிக்கும் வகையில் உள்ளடக்கத்தை உருவாக்கியுள்ளனர். இவ்வளவு அருவருப்பானதை ஏஐ மூலம் உருவாக்குவது என்பது விவரிக்க முடியாத அளவுக்கு வெட்கக்கேடானது.

இந்தப் போலி சித்திரிப்பு சுட்டமல்லி பாடலின் வீடியோவின் பின்னணியில் இருப்பவர்களே, உங்களில் யாரையும் நான் விட்டுவைக்க மாட்டேன். இதை உருவாக்கியவர்கள் மட்டுமின்றி, இதை பரப்புபவர்கள் மீதும் சாத்தியமான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.தயவுசெய்து இதனைப் பார்க்கவோ, பகிரவோ அல்லது அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில் எந்த விதத்திலும் ஈடுபடவோ வேண்டாம். இன்று, இது வேறு ஒருவருக்கு நடந்திருக்கலாம். நாளை அது உங்கள் தாயாகவோ, சகோதரியாகவோ, மனைவியாகவோ அல்லது மகளாகவோ இருக்கலாம்.

இது மிகவும் தீவிரமான பிரச்னை. ஏஐயின் தவறான பயன்பாட்டிற்கு எதிராக அனைத்து மாநில அரசுகளும், இந்திய அரசும் நடவடிக்கை எடுத்து, கடுமையான விதிமுறைகளைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# "ராக்கா" திரைப்படத்தில் நான் நடிக்கவில்லை ஐஸ்வர்யா லட்சுமி



'ராக்கா' திரைப்படத்தில் தான் நடிக்கவில்லை என நடிகை ஐஸ்வர்யா லட்சுமி கூறியுள்ளார்.

மலையாள நடிகையான, ஐஸ்வர்யா லட்சுமி தமிழ் மற்றும் மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் நடித்திருக்கிறார். மணிரத்னம் இயக்கிய 'பொன்னியின் செல்வன்' படத்தின் ஒன்று மற்றும் இரண்டாம் பாகங்களில் பூங்குழலி கதாப்பாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றார். இதற்கு முன்பாக அவர் நடித்த 'ஜகமே தந்திரம்', 'புத்தம் புது காலை' உள்ளிட்ட திரைப்படங்களும் நல்ல வரவேற்பை பெற்றிருந்தன. தொடர்ந்து, கேப்டன், கட்டா குஸ்தி, அம்மு குமாரி உள்ளிட்ட படங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றன. 2025ல் 'தக் லைப்' படத்தில் இவர் நடித்திருந்தார். இவர் சூரிக்கு ஜோடியாக நடித்திருந்த 'மாமன்' படமும் பெரும் வெற்றியை பெற்றது. தற்போது 'கட்டா குஸ்தி 2' திரைப்படமும் திரையரங்குகளில் ரூ. 50 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப்படமானது. தற்போது மலையாளம், தெலுங்கு படங்களில் ஐஸ்வர்யா லட்சுமி நடித்து வருகிறார்.

இயக்குநர் அட்லி நடிகர் அல்லு அர்ஜுன் கூட்டணியில் உருவாகும் திரைப்படத்திற்கு 'ராக்கா' எனப் பெயரிட்டுள்ளனர். உலகின் முன்னணி விஎப்எக்ஸ் நிறுவனங்களின் மேற்பார்வையில் இதன் முக்கிய காட்சிகள் உருவாகி வருவதால் அவதார் போன்று மிகச்சிறப்பான காட்சியனுபவங்களக ராக்கா எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

பான் உலகத் திரைப்படமாக ஆங்கிலம், கொரிய, சீன மொழிகளிலும் இப்படம் திரைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ராக்கா வணிகரீதியாகவும் மிகப்பெரிய கவனம் பெறும் என்றேகணிக்கப்பட்டுள்ளது. தீபிகா படுகோன் நாயகியாகவும் முக்கிய கதாபாத்திரங்களில் மிருணாள் தாக்கூர், ரஷ்மிகா மந்தனா, உள்ளிட்டோர் நடிப்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

இப்படத்தில் வில்லியாக நடிகை ஐஸ்வர்யா லட்சுமி நடித்து வருவதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில், 'ராக்கா' திரைப்படத்தில் தான் நடிக்கவில்லை என்றும் அதற்காக யாரும் தன்னை அணுகவில்லை என்றும் ஐஸ்வர்யா லட்சுமி விளக்கம் அளித்துள்ளார். மேலும், 'யாராவது அந்த வாய்ப்பை வாங்கிக்கொடுங்கள்' என பேட்டியில் கூறியுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.